242—

அரசு உதவி மருத்துவர்கள் பணிக்கு தேர்வு செய்யும் முறையை மாற்றி அமைத்தல்.

*15237—**டாக்டர் மு. காளிராஜன் :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு உதவி மருத்துவர்கள் பணிக்கு தேர்வு செய்ய நடத்தப்படும் தேர்வுகளை மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு தி ந. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் மு. காளிராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உதவி மருத்துவர்கள் தேர்வு செய்யும்போது எல்லா ஸ்பெஷாலிட்டி படித்தவர்களுக்கும், எம்.பி.பி.எஸ். அளவிலேதான் தேர்வு செய்கிறார்கள். ஏறத்தாழ 56 ஸ்பெஷாலிட்டி இருக்கிறது. ஆகவே ஸ்பெஷாலிட்டி படித்தவர்களுக்கு மட்டும் அரசு உதவி மருத்துவர்கள் தேர்வு பெற வாய்ப்புக் கிடைக்கிறது. எம்.பி.பி.எஸ்., அளவில் பார்த்தால் சம்பத்தில் படித்துப் பட்டம் பெற்றவர்களுக்கு மட்டும்தான் வாய்ப்பு கிடைக்கிறது. ஏற்கெனவே படித்து முடித்த சீனியர்களுக்கு வாய்ப்புக் கிடைப்பதில்லை. ஆகவே நேராக அந்தந்த speciality-wise ஒவ்வொரு முறையும் தேர்வு செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு தி ந. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. வளர்ந்துவருகிற இந்தச் சூழ்நிலையில் ஒவ்வொரு ஸ்பெஷாலிட்டியிலும் நாம் தேர்வு செய்யவேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. எனவே இது சம்பந்தமாக ஏற்கெனவே பல்வேறு மட்டங்களிலே ஆய்வு செய்து 'Specialities-wise recruitment' எடுக்கவேண்டுமென்று ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எப்படியிருந்தாலும்கூட, ஆரம்ப சுகாதார நிலையங்களிலே பணியாற்றுவதற்கு அடிப்படை மருத்துவம் படித்தவர்கள் போதும் என்ற ஒரு நிலை இருந்தாலும்கூட அதற்குப் பின்னாலே பதவி உயர்வு பெற்று அவர்கள் வருகிறபோது நமக்கு என்ன தேவையோ அந்தத் தேவைக்கான படிப்பு இல்லாமல் வேறு தேவையில்லாத படிப்பு படித்தவர்கள் அதிகமாக

வந்துவிடுகிறார்கள். எனவே இந்த நிலைமையை மாற்றுவதற்காக speciality-wise recruitment செய்யவேண்டுமென்ற ஒரு உணர்வைத் தெரிவித்திருக்கிறோம். ஆனால் எப்படியிருந்தாலும் கூட. அதை Tamil Nadu Public Service Commission–உடன் பேசி. அவர்கள் மூலமாகத்தான் specialities-wise recruitment செய்யவேண்டுமென்ற நிலையில் இருக்கிறோம். இதை அங்கேயிருந்து தனியாக எடுத்து வெளியிலே இருந்து நேரடியாக ரெக்ரூட்மென்ட் செய்வதற்கான நடவடிக்கை எதுவும் இப்போது ஆய்வில் இல்லை.

முற்பகல் 10-05

டாக்டர் மு. காளிராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அந்தப் பணிக்குத் தேர்வு செய்கின்றபோது. தேர்வு முறை 3 தாள்களாக வைத்து தேர்வு செய்யப்படுகின்றது. அந்த 3 தாள்கள் தேர்வு என்பதைக் குறைத்து ஆப்ஜெக்டிவ் டைப்–ஆக ஒரே தாளில் தேர்வு செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அதுபற்றி சர்வீஸ் கமிஷனில் முடிவு எடுக்கிறார்கள். நமக்குத் தேவை என்ன என்று சொல்லிவிடுகிறோம். எந்த அடிப்படையிலே, என்ன தகுதியிலே தேர்ந்தெடுப்பது என்பதை அவர்கள் முடிவு செய்கிறார்கள். இந்தத் தேர்வு நடத்துவது. அதற்கு எந்தவிதமான கொஸ்டியன்ஸ் கொடுப்பது என்பதையெல்லாம் சர்வீஸ் கமிஷன்தான் முடிவு எடுக்கிறதேயொழிய. அதிலே நாம் தலையிட முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவர்களைத் தேர்வு செய்கிற பொறுப்பை நாம் சர்வீஸ் கமிஷனிடம் விட்டுவிடுகிறோம் என்று அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். இப்போது சர்வீஸ் கமிஷன் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கக்கூடிய மருத்துவர்களில் எல்லாம். ஆரம்ப சுகாதார நிலையங்களிலே பணி புரிவதற்கு ஆட்களே கிடைப்பது இல்லை. அவர்கள் ஏதாவது பிராக்டீஸ் செய்யக்கூடிய நகரமாகப் பார்த்து. அங்கேதான் இருக்க விரும்புகிறார்களேயொழிய. கிராமப் பகுதிகளிலே சென்று பணி புரிய விரும்புவது இல்லை. ஆகவே. சர்வீஸ் கமிஷன் என்று சொல்வதைவிட. விதிகளைச் சற்று தளர்த்தி. அந்தந்தப் பகுதியிலே வாழக்கூடிய டாக்டர்கள் அங்கே ஆரம்ப சுகாதார நிலையங்களிலே கண்டிப்பாகப் பணிபுரிய ஒப்புக் கொள்கிறார்களா என்று நீங்கள் அவர்களிடம் ஓர் உடன்படிக்கை ஏற்படுத்திக் கொண்டு. அவர்கள் செய்வதாக இருந்தால். ஒரு கண்டிஷன் போட்டு. அந்தந்த ஆரம்ப சுகாதார நிலையங்களிலே மருத்துவர்களை நியமிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1994 ஏப்ரல் 11]

மாண்புமிகு திரு. ந. சு. பூத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதைப்பற்றி நீண்ட விவாதம் இங்கே நடந்து இருக்கிறது. பல முறை அதைப்பற்றிச் சொல்லி இருக்கிறேன். குறிப்பாக, ஆரம்ப சுகாதார நிலையங்களிலே மருத்துவர்கள் பணியாற்றுவதில்லை என்பது ஒன்று. இரண்டாவது, தேவையான ஸ்பெஷலிஸ்ட்டுகள் கிடைப்பதில்லை என்பது; மூன்றாவது, பெண் மருத்துவர்கள் இல்லை என்பது. இந்த மூன்று சங்கடங்களும் நமக்கு இருந்து கொண்டுதான் இருக்கின்றன. எனவே இந்தச் சங்கடங்களையும் நிவர்த்தி செய்வதற்காகத்தான் இப்பொழுது நாம் சர்வீஸ் கமிஷனோடு பேசி இருக்கிறோம். எனவே, ரெக்ரூட்மென்ட்டை அங்கே இருந்து நாம் எடுத்துவிட வேண்டிய அவசியம் இல்லை. அதற்குப் பதிலாக, இன்ன தேவைகள் தேவைப்படுகின்றன; இதுபோல் ரெக்ரூட் செய்ய வேண்டுமென்று அவர்களோடு பேசி, அவர்கள் அதற்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கலாம் என்ற ஒரு கருத்துத் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. இன்னும்கூட, தேர்தெடுக்கப்படுகிறபோது அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்காக அவர்களைத் தனியாகக் கேட்டுத் தேர்ந்தெடுப்பது என்ற ஒரு நிலையும், ஒரு அப்ளிகேஷன் அதற்காக 'கால் ஃபார்' செய்து தேர்ந்தெடுப்பது என்ற நிலையையும் ஏற்படுத்த வேண்டும் என்று நாங்கள் சொல்லி இருக்கிறோம். குறைந்தபட்சம் அவர்கள் ஒரு ஐந்து ஆண்டுகளாவது பணியாற்றிவிட்டு, அதற்குப் பின்னாலே அவர்கள் வேறு இடத்திற்கு வருவதற்கான வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லி இருக்கிறோம். இதிலே சிக்கல்கள் இருக்கின்றன. சர்வீஸ் கமிஷனிலே இதையெல்லாம் செய்ய முடியாத ஒரு சங்கடமான நிலை இருக்கும் என்று சொன்னால், அதற்குப் பின்னாலேதான்—சர்வீஸ் கமிஷனால் முடியாது என்று அவர்கள் சொன்னாலொழிய, நாம் வேறு விதமாகத் தேர்ந்தெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் போவதில்லை. சர்வீஸ் கமிஷன் எங்களால் எடுக்க முடியாது என்று சொல்லிவிட்டால், அதற்குப் பின்னாலே, கான்ட்ராக்ட் பேசிஸிலே போடலாம் என்ற கருத்து அரசிடத்திலே இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவப் பட்டதாரிகள் மருத்துவக் கவுன்சிலில் பதிவு செய்கிறார்கள். 1977வரை சீனியாரிட்டி அடிப்படையிலேதான் மெடிக்கல் கவுன்சில் மூலமாக அப்பாயின்ட்மென்ட் செய்தார்கள். இப்போது தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் அப்பாயின்ட்மென்ட் செய்கிறார்கள். ஆகவே, அந்த மெடிக்கல் கவுன்சில் சீனியாரிட்டி முறையில் அப்பாயின்ட்மென்ட் செய்து, 3 வருடங்கள் கழித்து, தமிழ்நாடு பப்ளிக்

சர்வீஸ் கமிஷனில் பதிவு செய்து, அவர்களை நிரந்தரமாக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை மீண்டும் பரிசிலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்திலே மருத்துவர்கள் போதாமல் இருந்தார்கள். அப்போது கிடைப்பதே அரிதாக இருந்தது. அப்போது அவர்கள் படித்துக் கொண்டு இருக்கும்போதே, அவர்களுக்கு அப்பாய்ன்ட்மென்ட் ஆர்டர் போய்விடும் என்ற நிலைகள் எல்லாம் இருந்தன. ஆனால், இன்றைக்குத் தேவையான அளவுக்கு மருத்துவர்கள் இருக்கிறார்கள். எனவே, போட்டியிலே யார் சிறப்பாக அங்கே எழுதுகிறார்களோ, யார் சிறந்த மருத்துவர்களாக இருக்கிறார்களோ, அவர்களை அரசு மருத்துவர்களாகத் தேர்ந்து எடுக்க வேண்டும் என்ற நோக்கத்திலேதான் இப்போது அதைச் செய்துகொண்டு இருக்கிறோம். எனவே, அதிலே மாற்றம் தேவை இல்லை என்றே கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஜி. ஆர். மாலா.

டாக்டர் ஜி. ஆர். மாலா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகில இந்திய அளவில் யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் சார்பில் உதவி மருத்துவர்கள் தேர்வு செய்கிற முறை, அதாவது பியூர்லி மெடிக்கல் என்ற அளவில்—ஒரு மருத்துவர் எந்தெந்த வகையான நோய்களைச் சந்திக்கிறார்; அதற்கு எப்படி மருத்துவம் செய்யலாம் ; எந்த முறையில் செய்தால் நல்லது என்று பல முறைகளில் ஆப்ஜெக்டிவ் டைப்பில் கொஸ்டியன் வருகிறது. ஆனால், நமது தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் ஜென்ரல் நாலெஜ் என்று சொல்லி— —ஹிஸ்டரி, ஜியோகிராஃபி இதுபோன்ற ஜென்ரல் நாலெஜ் மருத்துவர்களுக்கு இருந்தாலும், அது தேவையற்ற முறை என்று கருதுவதால், நமது அரசு, யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷனைப் போல பியூர்லி மெடிக்கலாக, ஆப்ஜெக்டிவ் டைப் கொஸ்டியனாகத் தயார் செய்வதற்கு, தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனை அறிவுறுத்த வழிமுறை ஏதும் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மருத்துவர்களைப் பொறுத்தவரை, அவர்களைத் தேர்ந்தெடுத்த பின்னாலே, அவர்கள் அந்த மருத்துவப் பணியை மட்டுமே செய்து கொண்டு இருப்பது இல்லை; அட்மினிஸ்ட்ரேட்டிவ் சைடும் பார்க்க வேண்டும் என்று இருக்கிறது. எனவேதான், பொது அறிவைப்பற்றி அவர்கள் பரிசோதிக்கிற நிலை இருக்கிறது. நாம், அட்மினிஸ்ட்ரேடிவ் கேடர் என்று தனியாகக் கொண்டுவரலாம் என்றுகூட யோசித்துக் கொண்டு இருக்கிறோம். ஒருவேளை அது வெற்றிகரமாக முடிந்து, இந்த

மருத்துவப் பணிக்காக வருபவர்கள், மருத்துவப் பணியை மட்டுமே செய்கிறார்கள்; அட்மினிஸ்ட்ரேடிவ் சைடு வருவதில்லை என்ற ஒரு நிலை ஏற்பட்டால், அதைப்பற்றிச் சிந்திக்கலாம். ஆனால், இப்போது இருக்கிற நிலையே சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் இதனைச் சொல்லுகிற காரணத்தினால், இப்பொழுது நாம் அதைப்பற்றி அவர்களிடத்திலே விவாதிக்க இருக்கிறோம். அப்போது இதையும் ஒரு கருத்துருவாக வைத்து, இதைப் பற்றி அவர்களிடத்தில் கருத்துக்களைக் கேட்டு, அதன்மீது அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் அ. ஸ்ரீதரன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தில் உதவி மருத்துவர்களைத் தேர்ந்தெடுக்கிறபோது அந்த ஆண்டு படித்த மருத்துவர்கள் வருகிற நேரத்தில் அந்தத் தேர்வுக்கு வந்தால் அதிலே அதிக மதிப்பெண்களைப் பெற்றுத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆனால் 5 ஆண்டு, 6 ஆண்டுக்கு முன் படித்த மாணவர்கள் அந்தத் தேர்வுக்கு வருகிறபோது அவர்களுக்கு அந்தத் தேர்வில் ஒரு 'கம்யூனிகேஷன் கேப்' இருக்கிற காரணத்தால், அவர்கள் அந்தத் தேர்வில் தேர்ச்சி பெற வாய்ப்பு இல்லாமல், அப்படியே தங்கித் தங்கி அவர்களிடத்தில் ஒரு விரக்தி உண்டாகிறது. எனவே, தேர்வு முறையில் ஒவ்வொரு வருடமும் சீனியாரிட்டிக்கு ஏற்ப ஒரு குறிப்பிட்ட மதிப்பெண்ணை ஒதுக்கித் தருவதற்கு தேர்வாணையத்திற்கு நம்முடைய மருத்துவத் துறை பரிந்துரை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே 'கம்யூனிகேஷன் கேப்' வரக்கூடாது. இந்த 'கம்யூனிகேஷன் கேப்' வந்தால் வேறு பிரச்சினை வந்து விடும். ஆபத்தே கூட வந்து விடும். எனவே, அவர்களும் அப்-டு-டேட்டாகப் படித்துக்கொள்ள நடவடிக்கையெடுக்கவேண்டுமே ஒழிய, ஒரு தனிப்பட்டவருக்காக அரசாங்கம் வளைந்து கொடுத்து நடவடிக்கையெடுக்க முடியாது. எனவே, அவர்களும் படித்து, தங்களை அதற்குத் தயார் செய்து வைத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் அரசினுடைய கருத்தாக இருக்கிறது. எனவே, யார் சிறப்பாக வெற்றி பெறுகிறார்களோ அவர்களுக்குத் தான் அரசு மருத்துவமனைகளில் நாம் இடம் கொடுப்பது சரியாக இருக்கும் என்று அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஜெ. பரந்தாமன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் எடுத்த நடவடிக்கை காரணமாக எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் மருத்துவர்கள் நல்லமுறையில் வந்து கொண்டிருக்கிறார்கள். சில இடங்களில், மலைப்பிரதேசங்களில் இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர்கள் கொஞ்சம் வருவதில் பிரச்சினை இருக்கிறது. அப்படிப்பட்ட சமயத்தில் அல்லது நீண்ட கால விடுப்பில், மெடர்னிட்டி லீவு அல்லது 'சிக் லீவ்' போன்ற சமயங்களில் கான்ட்ராக்ட் பேசிசில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மருத்துவர்களைப் போடுவதாக அறிவித்து இருக்கிறார்கள். எப்போது முதல் இந்த கான்ட்ராக்ட் முறை செயல்படத் தொடங்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சர்வீஸ் கமிஷனோடு நாங்கள் பேசயிருக்கிறோம். சர்வீஸ் கமிஷனில் இப்படி நடவடிக்கையெடுத்து, நமக்கு தேவைக்கேற்ப எடுத்துக் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது என்று அவர்கள் சொன்னால், நாம் இந்த முறையை அமலாக்கலாம் என்று இருக்கிறோம். அவர்களே நாங்கள் எந்தெந்த இடத்தில் உங்களுக்கு இல்லையென்று சொல்கிறீர்களோ, அந்த இடத்திற்கு நாங்களே தேர்ந்தெடுத்து கொடுத்து விடுகிறோம் என்று சொன்னால், காலதாமதம் இல்லாமல் கொடுப்போம் என்று சொன்னால் அவர்கள் மூலமாக எடுத்துவிடுவது என்று நாங்கள் இருக்கிறோம். இதிலே எதுவும் செய்ய முடியாது, காலதாமதம் ஏற்படுகிறது, மருத்துவர்கள் இல்லாத பிரச்சினை இருக்கிறது என்று வந்தால் ஒழிய நாம் இந்த நடவடிக்கையை எடுக்க முடியாது. எனவே சர்வீஸ் கமிஷனோடு இதைப்பற்றிப் பேச இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் வெ. சரோஜா.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பெயரில் ஏற்படுத்தவுள்ள குழந்தைகள் நலனுக்கான 15 அம்சத் திட்டத்தை சீரோடும் சிறப்போடும் செயல்படுத்தும் பொறுப்பை ஏற்றுள்ள கிராமப்புறங்களில் பணிபுரியும் மருத்துவர்கள் அந்தப் பொறுப்பில் முக்கியப் பங்கு வகிக்கிறார்கள் என்பதை உணர்ந்துள்ள இந்த அரசு, அதைச் சிறப்பாகச் செயல்படுத்த, ஹவுஸ் சர்ஜனாக இருக்கும்போது கிராமப்புறங்களில் அனைவரும் பிரசவம் பார்க்க வேண்டுமென்று பயிற்சி கொடுக்கிறது. ஆனால் கிராமப்புறங்களில் சர்வீஸ் கமிஷன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண் மருத்துவர்கள் பிரசவம் பார்ப்பதில் முக்கியக் கவனம் செலுத்துவதாக இல்லை. பெண் மருத்துவர்கள் இல்லையென்ற

காரணத்தால் 'டிலேய்ட் கேசஸ்' என்று மற்ற இடங்களுக்கு ரெபர் செய்யும்போது சில நஷ்டங்கள் ஏற்படுவதைத் தடுக்கும் வண்ணம் அரசு மருத்துவர்களை கிராமப்புறங்களில் தேர்ந்தெடுக்கும்போது, அவர்கள் கண்டிப்பாக அந்தப் பிரசவக் கேஸ்களைப் பார்க்க வேண்டுமென்று அறிவுறுத்துவதோடு, அந்தந்த 30,000 ஜனத்தொகைக்கு உட்பட்ட பிரசவக் கேஸ்களில் ஏற்படும் நஷ்டங்களுக்கு அந்தந்த மருத்துவர்களே பொறுப்பேற்க வேண்டுமென்று அரசு வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மருத்துவர்களைத் தேர்வு செய்கிற பிரச்சினை பற்றியது தான், நீங்கள் அதற்குள்ளே விரிவாகப் போனால் சரியாக வராது.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவர்களைத் தேர்ந்தெடுக்கும்போது அவர்கள் பிரசவம் பார்ப்பதற்கான பணியை மேற்கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். குறிப்பாக ஆண் மருத்துவர்கள் அதற்குத் தயாராக இருந்தாலும்கூட பிரசவம் பார்ப்பதற்காக வரக்கூடியவர்கள் பெண்கள் அதை விரும்பமாட்டார்கள் என்றே கருதுகிறேன். எனவேதான் தேர்ந்தெடுக்கப்படுகிறபோதே ஒவ்வொரு மருத்துவமனையிலும் பெண் டாக்டர்கள் இருக்க வேண்டுமென்று ஒரு நிலையை வற்புறுத்த வேண்டுமென்ற ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம். இதற்கு முன்னால் 30 சதவீதம் பெண் டாக்டர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று ஒரு நிலை இருந்தது. அதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் அது போதாது என்ற நிலை இருக்கிறது. எனவே, எதிர்காலத்தில் ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் கண்டிப்பாக ஒரு பெண் மருத்துவர் இருப்பதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் க. கோபால்.

முற்பகல் 10-15

டாக்டர் க. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதெல்லாம் உதவி மருத்துவர்களை அரசுப் பணிக்குத் தேர்ந்தெடுக்கிறபோது, அவர்களை டி.என்.பி.எஸ்.சி. வழியாகத் தேர்ந்தெடுக்கிறார்கள். அந்த வகையிலே, தேர்ந்தெடுக்கிறபோது, 1980, மற்றும் அதற்கு முன்னாலே 1975 ஆம் ஆண்டிலே தேர்ச்சி பெற்ற மருத்துவர்கள் எல்லாம், தற்போது பயிலுகின்ற மாணவர்களுக்குப் போட்டியாக இருக்க முடியாமல் உள்ளதால் இன்று அரசுத்துறைகளிலே சேருவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. எனவே, டி.என்.பி.எஸ்.சி.

என்பதை எடுத்துவிட்டு, நேரடியாக சீனியாரிட்டி மூலம் அரசுப் பணிகளுக்கு அனுப்பப்படுமா? மேலும் கிராமப்பகுதிகளிலே சில ஊர்களிலே எல்லாம் மருத்துவர்கள் வேலைக்குச் செல்ல முடியாமல், அங்கே போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தால் அந்தப் பணிகளுக்குச் செல்ல முடியாமல் இருக்கிறார்கள். எனவே, அந்தப் பகுதிகளில் படிக்கின்ற மருத்துவர்கள் அந்தப் பகுதிக்கு என்றே தனியாக அழைக்கப்பட்டு பணிகளில் அமர்த்தப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதற்கு ஏற்கனவே பதில் சொல்லியிருக்கிறேன். அதாவது சீனியாரிட்டி அடிப்படையிலே நாம் எடுத்தோமானால், ஏற்கனவே டாக்டர் ஸ்ரீதரன் அவர்கள் சொன்னதைப் போல, இதிலே அதிக வயதானர்கள் வருவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுவிடுகிறது. இப்போது ஓப்பன் காம்படிஷனிலே யார் சிறப்பாகச் செய்கிறார்களோ, அவர்கள் வருகிறார்கள். எனவே, அப்படித்தான் எடுக்க முடியுமேயொழிய, இதிலே சீனியாரிட்டி என்பதற்காக மதிப்பெண் கொடுப்பது என்பது முடியாத காரியம். அதேபோன்று இன்னொரு கேள்விக்கு.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது வரக்கூடிய மாணவர்களோடு, போட்டி போட்டு......

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அவர்கள் போட்டி போட முடியவில்லை என்றால், அதற்குத்தான் நான் ஏற்கெனவே சொன்னேன், அவர்கள் தயார் நிலையில் இருந்து கொள்ள வேண்டும் என்பதுதான் அரசினுடைய எண்ணமாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர்கள் கேள்வி கேட்கிறார்கள். (குறுக்கீடு) திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி.கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்கவேண்டும் என்று இருந்த கேள்வியில் பாதியைக் கேட்டுவிட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே, சட்டமன்றத்திலேகூட நான் கேட்ட கேள்விக்குப் பதில் தந்திருக்கிறார்கள். கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய பி.எச்.சி. க்களிலே கட்டாயம் ஒரு ஆண் டாக்டரும், பெண் டாக்டரும் இருக்கவேண்டும். அப்போதுதான் வருகின்ற பொதுமக்களுக்கு, தாய்மார்களுக்கு வசதியாக இருக்கும் என்று சொல்லியிருந்தாலும், இதை சர்வீஸ் கமிஷன் மூலமாகத் தேர்வு செய்தால், அவர்களைக் கட்டாயப்படுத்த இயலாத சூழ்நிலை அரசுக்கு இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நேரடியாக அரசின் மூலமாக, துறையின் மூலமாக, யார் யார், பெண் டாக்டர்கள், ஆண் டாக்டர்கள்

இப்படிப்பட்ட கிராமங்களில், அந்தந்த மாவட்டங்களில் பணிபுரிய வருகிறார்கள் என்பதை பத்திரிகை மூலமாக விளம்பரப்படுத்தி, அப்படி வருகின்ற டாக்டர்களை நியமனம் செய்தால்தான், அரசு நினைக்கின்ற, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய உண்மையான லட்சியத்தை நிறைவேற்ற வாய்ப்பு உண்டாகும். ஆகவே, அப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுத்து நேரடியாக அரசின் மூலம் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு டாக்டர்களை நியமிப்பதற்கு அமைச்சர்அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நேரடியாக நியமித்தாலும், டி.என்.பி.எஸ்.சி. மூலமாக எடுத்தாலும், சர்வீஸ் ரூல்ஸ் என்பது ஒன்றுதான். எனவே, அதற்குப் பின்னாலே, அவர்களைக் கட்டாயப்படுத்தினால்—சில விதிவிலக்குகள், உரிமைகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. அதனால்—அவர்கள் சில நேரங்களிலே விடுமுறைகளிலே போகின்ற நிலை ஏற்பட்டு விடுகிறது. எனவே, இப்போது நாம் என்ன கருதியிருக்கிறோம் என்று சொன்னால், சர்வீஸ் கமிஷனோடு பேசி, இப்போது ஊட்டி என்று சொன்னால், ஊட்டியிலே உள்ள குறிப்பிட்ட ஒரு பி.எச்.சி. என்று சொன்னால், அந்த இடத்திற்கு என்று தேர்ந்தெடுத்துக் கொடுங்கள் என்று நாங்கள் கேட்டிருக்கிறோம். அவர்களும் இதைப்பற்றி ஆய்வு செய்து சொல்வதாகக் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, அந்த அடிப்படையிலே தேர்ந்தெடுத்தால், இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும். ஒருவேளை சர்வீஸ் கமிஷனால், அப்படி தனிப்பட்ட முறையிலே தேர்ந்தெடுத்துக் கொடுப்பது எங்களால் முடியாத காரியம், நடைமுறையிலே எங்களால் செய்ய முடியாது என்று தெரிவித்து விட்டால், அதற்குப் பின்னாலே, அந்த இடங்களுக்கு மட்டும் ஒரு குறிப்பிட்ட அளவிலே அரசாங்கமே விளம்பரத்தின் மூலமாக எடுக்கலாம் என்ற ஒரு கருத்து வைக்கப்பட்டு இருக்கிறது. இதைப் பற்றி சர்வீஸ் கமிஷனோடு பேசி முடிவு எடுத்த பின்னாலேதான் இது அமலாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோன்று டாக்டர் கோபால் அவர்களும் இதே கேள்வியைக் கேட்டார்கள். அதற்கும் இந்தப் பதில்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 243, திரு. எஸ். எம். துரை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.